O.S. No: 73/2017

பெயர்: அசலாம்பாள்

**வா.சா. 4**

02/02/2023

**குறுக்கு விசாரணை**

அய்யப்பன் என்னுடைய அண்ணன் மகன். என்னுடைய கணவருக்கு வழக்கு சொத்தை தவிர வேறு சொத்து எதுவும் கிடையாது. 7 வருடத்திற்கு முன்பு உயில் எழுதப்பட்டது. உயில் எழுதிய என் கணவர் கலியமூர்த்தி இறந்த பிறகு அந்த உயில் என்னிடம் தான் இருந்தது. வண்ணக்குடி கிராமத்தில் இருந்து திருவிடைமருதூர் சார் பதிவாளர் அலுவலகம் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்று தெரியாது. வண்ணக்குடி கிராமத்தில் இருந்து திருவிடைமருதுரைவிட கும்பகோணம் தூரத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். உயில் எழுதுவதற்கு என்னை அழைத்து சென்றார்கள். உயில் சாட்சிகளை அய்யப்பன் அழைத்து வரவில்லை. நானும் என் கணவரும் கெளதமி வகையறாவிடம் பணத்தை பெற்றுக்கொண்டு சொத்தை விட்டுக்கொடுத்துவிட்டோம் என்றும், தற்போது அவர்களை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக ஒரு உயிலை தயார்செய்தோம் என்றால் சரியல்ல. உயிலில் என் கணவரே கையொப்பமிடவில்லை என்றும், நானும், அய்யப்பனும் பொய்யாக சாட்சிகளை உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல.

ஒப்பம்(xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

ஒப்பம்(xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

**/உண்மை நகல்/**

ஒப்பம்(xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.